DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No.38 of 2025**

| | | |
|---|---|---|
| Deposition of P.W.17 (L.W.18) | } | Prosecution |
| | } | Defence |
| | } | |
| Name of the Witness | : | திரு. டாக்டர் வசந்தராஜ் |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 09.04.2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது பாலக்கோடு அரசு மருத்துவமனையில் உதவி அறுவை சிகிச்சை நிபுணராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.05.2024ம் தேதி காலை

06.00 மணியளவில் கோவிந்தன், 55 வயது, த/பெ. பெருமாள், தீர்த்தகிரி நகர், பாலக்கோடு என்பவர் சிகிச்சைக்கு வந்தார். அப்போது அவர் சுயநினைவுடன் இருந்தார். தான் இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்யும்போது டாடா ஏஸ் வண்டி அவர் மீது மோதியதால் விபத்து ஏற்பட்டதாக சொன்னார். அன்றைய தினம் காலை 04.30 மணிக்கு பொப்பிடியில் விபத்து ஏற்பட்டதாக சொன்னார். அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டன.

1) முன் நெற்றியில் சிராய்ப்பு காயம் 1x1 cm

2) முதுகு தண்டுவடத்தில் வலி இருப்பதாக கூறினார்.

அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்கு நுண்கதிர்படம் எடுக்கப்பட்டது. அதில் அவருக்கு எலும்பு முறிவு எதுவும் காணப்படவில்லை. அவரை உள்நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார். 3 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சொற்ப காயங்கள் என்று நான் காய சான்றிதழ் வழங்கினேன். நான் வழங்கிய காய சான்றிதழ் **அ.சா.ஆ.25** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**குறுக்கு விசாரணை (1,4 எதிரிகள் தரப்பில்)**</u>

1) காய சான்றிதழ் எந்த தேதியில் வழங்கப்பட்டது என்றால் 10.05.2024ல் வழங்கப்பட்டது. ஆனால் காயம்பட்ட நபர் 12.05.2024ல் அனுமதிக்கப்பட்டதாக

தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை விசாரிக்கவே இல்லை.

2) காயம்பட்ட நபருக்கு இரண்டு தோள் பட்டைகளிலும் காயம் எதுவும் இல்லை. கீழே விழுந்தாலும், விபத்து ஏற்பட்டாலும் சிராய்ப்பு காயங்கள் ஏற்படும். ஒரு நபர் இரு சக்கர வாகனத்தில் செல்லும்போது அவர் மீது வேகமாக வந்த நான்கு சக்கர வாகனம் மோதி அவர் அந்த நான்கு சக்கர வாகனத்தின் மீது விழுந்து கண்ணாடி உடைந்து கீழே விழும்போது நான் சொல்லி உள்ள காயங்களும் அதற்கு மேலே காயங்களும் ஏற்பட வாய்ப்புண்டு. நான் வழக்கிற்காக காய சான்றிதழ் வழங்கி இருந்தால் 12.05.2024க்கு பிறகுதான் கொடுத்திருப்பேன் என்றால் காய சான்றிதழில் தேதி தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**<u>குறுக்கு விசாரணை (3,6,7 எதிரிகள் தரப்பில்)</u>**

1) 3 நாட்கள் காயம்பட்ட நபர் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்று ஆவணங்களை வைத்து சொல்கிறேன். ஆனால் அந்த ஆவணங்களை கொண்டு வரவில்லை.

(மேற்படி குறுக்கு விசாரணையை 3,6,7 எதிரிகள் தரப்பில் ஏற்று கொண்டார்)

Sd/Tmt.U.Monica,M.L.,
Additional District Judge,
Dharmapuri.